
தீபம்:பி

# ஆத்மஜோதி

ஆத்மீக மாத சஞ்சிகை

ஒளி : 08

மார்கழி : 2005



ஸ்ரீ ரமண மகரிஷிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க சில வரிகள்.....

- மறக்க வேண்டியவர்களை மறக்காமல் நினைத்து வருவதும் மறக்க வேண்டாதவை களை மறந்துவிடுவது தான் இந்த உலகில் தற்போது இருந்துவரும் துன்பம் அனைத்திற்கும் காரணம்.

- சுறுசுறுப்புடன் வேலை செய்துவரும் தேனீக்களுக்கு அழுவதற்கு நேரமில்லை.

- பிசாசுதான் ஜனநாயகத்தைப் பின்பற்றிய முதல் நபர்.

- ஒருவன் சாப்பிடக் கூட முடியாதபடி குறைவான கூலிப் பணத்தைக் கொடுக்காதீர்கள்.

- எண்ணங்களின் குழந்தைகள் தான் ஏழ்மையும், செல்வமும்.

- ஒருவன் எப்படி இறந்தான் என்பதைப் பற்றி அனைவரும் பேசுகிறார்கள், தவிர அவன் எப்படி வாழ்ந்தான் என்பதுதான் முக்கியமானது. ஆனால் அதைப்பற்றி யாரும் பேசுவதில்லை.

- வருத்தம் தன்னை ஆட்கொள்ளுவதற்கு நல்ல மனிதர்கள் இடம்கொடுக்க மாட்டார்கள்.

- பனிப்புயல் வீசும்போது கூட மலைச்சிகரங்கள் கம்பீரமாகவும் அமைதியாகவும் காட்சி தருகின்றன.

- மனத்திருப்தி நமக்கு இயற்கையாகக் கிடைத்த செல்வம். ஆடம்பரம் செயற்கையாக உருவாக்கிக் கொண்ட பஞ்சம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீபம் : ஒளி
பார்திப வருடம்
மார்கழி
2005

பதிப்பாசிரியர்
நா. முருகையா

தியான
மணிமண்டபம்

எழுத்தமைப்பும்
அச்சுப் பதிப்பும்
ஜய்ராம் பிறின்ரேஸ்

வெளியீடு
ஆத்மஜோதி
தியான
மணிமண்டபம்
ஏழாலை.

தொடர்பு முகவரி
நா.முருகையா,
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

உ
சிவமயம்
ஆத்மஜோதி
தாபிதம் : 1948
**ARTHMA JOTHY**
Est. 1948
ISSN 17039185

# உள்ளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | ஞானவாணி | 02 |
| 2. | ஸ்ரீரமணத் தியானம் | 04 |
| 3. | ஏன் போற்ற வேண்டும்? | 05 |
| 4. | ரமண தரிசனம் | 08 |
| 5. | பிரணவ (உ) வடிவம் | 16 |
| 6. | குகஸ்ரீ வாரியார் சுவாமிகள் | 17 |
| 7. | தியானம் | 25 |
| 8. | வராதே என்றாலும் வந்தவள்! | 34 |
| 9. | தீர்க்க சுமங்கலி | 35 |
| 10. | ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவவ | 36 |

| | | |
|---|---|---|
| பிரதி | :- | 30/= |
| வருட சந்தா | :- | 400/= |
| ஆயுள் சந்தா | :- | 3000/= |

# ஞானவாணி

இறைவன் அருளிய பால லீலைகள் என்று புராணங்களில் கூறப்படுவது சில சமயம், மனதைச் சபலத்தில் ஈடுபடுத்துவதாகவும், சில சமயம் வேதனை அளிப்பதாகவும் கூட இருக்கிறது. இதை நமது புராணங்கள் எப்படி நியாயப்படுத்துகின்றன?

**ம**னது என்பதே விசித்திரமானது. சம்ஸ்காரம் உள்ள மனது என்பது அது இல்லாத மனத்தைக் காட்டிலும், முற்றிலும் வேறாக இருக்கிறது. கண்ணனுடைய கதையைப் படித்தால், அவன் வெண்ணெய் திருடித் தின்றான் என்று வரும். இதைப் படித்துவிட்டு, நாமும் ஏன் வெண்ணெய் திருடித் தின்னக்கூடாது என்று ஒரு சிலருக்குத் தோன்றலாம். ஆனால், ஒருவரும் ஒரு போதும் அதைப் போலச் செய்யக்கூடாது.

ஜனங்களுக்குப் பகவானை வெவ்வேறு வகையில் வர்ணனை செய்தால், அதில் ருசி ஏற்பட்டு, இறைவனிடம் பிரியம் ஏற்படும் என்பதே அதன் கருத்து. சாதாரண மக்களுக்கு, இறைவனின் பால லீலைகள், சொல்லப்படுகிறது. இறைவன் மீது பிரேமையை உண்டாக்குவதற்காகத்தான் பக்தனுக்கு அத்தகைய உணர்வினால், அதிக ஈடுபாடு தான் ஏற்பட வேண்டும். பக்தனின் மனத்தை உள்நோக்கித் திருப்புவதற்காகவும், பகவானால் சில லீலைகள் செய்யப்படுகின்றன.

இதன் உட்பொருளைத்தான் நாம் ஏற்க வேண்டும்; செய்கைகள் முக்கியம் அல்ல. பகவானின் பல லீலைகளைப் பார்த்து, நாமும் செய்வதென்றால், அவர் கோவர்த்தன பர்வதத்தைத் தூக்கி நிறுத்தியதைப் போல நம்மால் செய்ய முடியுமா?

ஒரு சமயம், ஒருவன் கோயிலுக்குச் சென்றான். அங்கே அவனுக்கு பிரசாதம் கொடுத்தார்கள். அவனுக்கு அதைப் போலப் பிரசாதம் வாங்கிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கமே கிடையாது. பிரசாதமாகத் தீர்த்தம் கொடுத்த போது, அதில் துளசி இருந்தது.

அதனால், அவன் பருகியதும், வாயில் ஏதோ சிக்கிக் கொண்டதைப் போல இருந்தது. அதை அவன் அங்கேயே துப்பி விட்டான். உடனே, அருகில் இருந்தவன், "என்னய்யா இது? கோயிலில் துப்பலாமா?" என்று கோபத்துடன் கேட்டான். அவன் உடனே அதை எடுத்து அங்குள்ள ஒரு விக்கிரகத்தின் கால் மீது வைத்தான். வேறொருவன், கோபத்துடன், "எச்சில் பட்டதை ஸ்வாமியின் மீது வைக்கலாமா, அயோக்கியனே?" என்று கேட்டான். அதன்பின், அவன் அதை எடுத்துப் பையில் போட்டுக் கொண்டு போனான். பிரசாதம் கொடுப்பதும் அதை ஏற்பதும் வெவ்வேறு மனிதர்களிடம் எப்படி வெவ்வேறு உணர்ச்சிகளை எழுப்பி இருக்கிறது பார்த்தீர்களா? மனப்பக்குவம் இருக்குமானால், துளசி பிரசாதமாக மட்டும்தான் தெரியும். இல்லாவிட்டால், அது வெவ்வேறு விதமான சிந்தனைகளைத் தூண்டிச் சச்சரவும் ஏற்படச் செய்யும்.

**ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யா**
**தீர்த்த மஹாஸ்வாமிகள்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீரமணத் தியானம்

கைலாயத்தினின்றும் எழுந்தருளி,திருச்சுழி க்ஷேத்திரத்தில் சுந்தர மய்யருக்கும் அழகம்மைக்கும் புத்திரனாக அவதரித்து, தன்னருங் குணங்களால் அவர்களை மகிழ்வித்து, தன் தெய்வசக்தியால் அவர்கள் புனித வாழ்வையடையச் செய்த ஹே! திருச்சுழி ரமணா! உன்னை என் மனப்பூர்வமாய் நமஸ்கரிக்கின்றேன்.

திடீரென்று மரணபயம் ஏற்பட்ட பொழுது யாரிடமும் சொல்லாமல் "சாவு" என்றால் என்ன? எது சாகிறது? என்று தனக்குத்தானே விசாரித்துக்கொண்டு மரண சம்பவத்தை நிதர்சனமாக நடித்து "நான்" "நான்" என்பது அழியும் சரீரமல்ல. ஆனால், உண்மைப்பொருளான ஆத்மா - பிறப்பு இறப்புக்குக் கட்டுப்படாமல் நித்தியமாயுள்ள பூரண ஏகவஸ்து என்று இளமைப் பிராயத்திலேயே அதீதமான முடிவுக்கு வந்தது. குருவின்றித் தானே ஆன்ம ஞானம் அடைந்து, பிரபஞ்ச குருதேவனாகிய ஹே! ஸ்வயம் பிரகாச ரமணா! உன்னை நமஸ்கரிக்கின்றேன்.

அருணை நகரை அடைந்து, பால சன்யாசிக் கோலம்பூண்டு, மௌன விரதம் ஏற்று, கோவிலில் பாதாள லிங்கம் என்ற இருட்டுக் குகையில் தனிமையாக அமர்ந்து, தனதுடலை ஈ, எறும்பு, விஷப்பூச்சி முதலிய ஜீவராசிகளுக்கு இரையாக அளித்து. சரீரம் ரணமயமா யிருந்ததையும் அறியாமல் நீண்டகாலம் யோகத்தில் வீற்றிருந்த ஹே! யோகரமணா! உன்னை நமஸ்கரிக்கின்றேன்.

மௌனமே உருவாயவதரித்து, தேடியலைந்தவர்களது மனக்கிலே சத்தைப் போக்கி, பேசாமற்பேசி, அவரவர்களின் சந்தேகங்களை நிவர்த்திசெய்து, மனத்துக்கு அளவற்ற சாந்தியை அளித்து, ஆத்மானந்த போதையை ஊட்டி, "உண்மைச் சொருபத்தை அடைந்தவன் பிறப்பில்லா நித்தியானந்தத்தை அடைகிறான்" என்று உபதேசித்து, ஆயிரம் வாயுள்ள ஆதிசேடனாலும் வர்ணிக்க முடியாத அருள் ஞானக் கிரணகங்களால் உலகத்தைப் பிரகாசிக்கச் செய்வித்து, பக்தகோடிகள் சூழ அயோத்தி, பிருந்தாவனம் போன்ற அருணாசல ஆச்சிரமத்தில் சகச நிஷ்டையில் மூழ்கி, ஆனந்தத்தில் அமர்ந்திருக்கும் ஹே! ஆனந்தமோன ரமணா! உன்னை மீண்டும் மீண்டும் நமஸ்கரிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் போற்ற வேண்டும்?

மனித வாழ்வுக்குச் சமயம் தேவைதானா? என்ற கேள்வி மக்களுள் ஒரு சிலரால் கேட்கப்படுகின்றது. உலகமெங்கணும் வாழும் மக்களுள் பெரும்பாலோர் பொருள் உணர்ந்தோ அன்றி உணராமலோ ஏதேனும் ஒரு சமயத்தைச் சார்ந்துள்ளமை அறிவோம். எனினும் மிகப் பழங்காலந் தொட்டே சமயம் வேண்டாம் என்று கூறும் உலகாயதவாதிகளும் இருந்துள்ளனர். 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்' என்று எண்ணமிட்டு எப்படியேனும் வாழ்ந்தால் போதும் என்பதே அவர்கள் வாழ்க்கை நெறியாக அமைகின்றது. இரண்டாயிரமாண்டுகளுக்கு முன்பே இவர்களுடன் சேரலாகாது என்ற உண்மையை 'இல்லை என்போர்க்கு இன்னாகிலியர்' என்று அடியவர் விடுத்த வேண்டுகோளால் உணர்கின்றோம். எனவே பழங்காலந்தொட்டே 'இல்லை' என்ற வாதம் இருந்து வந்திருக்கிறது. அவர் தம் முயற்சிக்கும் மாறுபாட்டுப் பேச்சுக்களுக்கும் இடையில் உலகமெங்கணும் சமயம் வளர்ந்து கொண்டுதான் வருகின்றது. அதன் இடையறாத நிலைபெற்ற வாழ்வே, அது மக்கள் வரலாற்றில் கொண்ட தொடர்பை ஒருவாறு விளக்கும் என்பது திண்ணம்.

மக்கள் தோன்றிய அந்தநாளிலே சமய உணர்வு பெற்றவர்களாக இருந்தார்கள் எனக் கொள்ளமுடியாது. அவர் தம் சமுதாய வாழ்வின் மேடு பள்ளங்கள் எத்தனையோ – அவற்றை நம்மால் எண்ணவும் முடியாது. அந்த மேடு பள்ளங்களில் ஏறியும் சரிந்தும் வழுக்கியும் வீழ்ந்தும் வளர்ந்த மனித இனம் தன் ஏற்றத் தாழ்வுக்கு உரிய காரணத்தை ஆராயத் தொடங்கிய நாளிலே தான் சமயம் உண்டாயிற்று. சமயத்தை உண்டாக்கியவன் மனிதன்தான் என்றாலும் அது அவனைச் செம்மையான நல்வழிக்கு ஈர்த்துச் செல்லுகின்ற காரணத்தால் அவனுக்கு வழிகாட்டியாக அமைந்துவிட்டது. தன்னிலும் மேம்பட்ட ஒரு பொருள் தன் முயற்சியினிடையில் இருந்து கொண்டு, அதன் விருப்பத்தின் வழியே மனித முயற்சியை ஒப்பதோ அன்றி முறியடிப்பதோ செய்து அவனை ஆட்கொள்ளுகின்றது. அந்த ஒரு காணாத பொருளையே கடவுள் என்றும் இயவுள் என்றும் பண்டைத் தமிழர் போற்றியுள்ளார்கள்.

தமிழர் மட்டுமன்றி உலகில் உள்ள மக்கள் அனைவரும் தமக்கு மேலுள்ள ஒரு பொருள் தம்மைச் செலுத்துகின்றதென்றும், அதன் அருளாணையை மீறி மனிதப் பண்பற்று வாழின் தீங்கு சேரும் என்று நம்பியே சமய வாழ்வை மேற்கொள்ளுகின்றனர். இடையிடையே சமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிகளைப் பின்பற்றுவோரில் பலர் நிலைகெட்டு வழுக்கி வீழ்ந்து, தமக்கும் தம் சமய நெறிக்கும் மாசு தேடுகின்றார்கள் என்பது உண்மையே. எனினும் சமயங்கள் அடிப்படையை உற்று நோக்கின் அந்த அடிப்படை எல்லாச் சமயங்களுக்கும் ஒன்றேயாய், மனிதனை மனிதனாக வாழ வழி காட்டுவதாகவே அமைந்துள்ளமை அறிவோம். மனிதன் தவறு இழைப்பானாயின் அவனை 'அடித்துத் தண்டித்து' நேரிய வழியில் திருத்தும் உலகநெறியே சமய நெறியிலும் காணலாம். அதனாலேயே 'நினைந்துருகும் அடியாரை நையவைத்தாய்' என்று அடியவர்கள் பாட வேண்டியவர்களானார்கள். ஆனால் அந்தத் துன்பத்தில் அடியவர்கள் பட்டு எழுவது, பொன்னை நெருப்பிட்டுப் புடமிட்டு எடுப்பதை ஒக்கும். பொன்னின் ஒளி மேலும் மேலும் விளங்குவது போன்று, நல்லன்பர்தம் தூய உள்ளமும் அறப்பணியும் மென்மேலும் சிறக்கும். இதையே திருவள்ளுவர் பொது நிலையில்

**'சுடச் சுடரும் பொன்போல்**
**ஒளிவிடும் துன்பம்**
**சுடச் சுட நோற்கிற் பவர்க்கு'**

எனக் காட்டிச் சென்றார்.

எனவே சமய நெறியாளர் பெறுகின்ற அத்தனை துன்பங்களும் - தியாகங்களும் - மக்கள் சமுதாயம் மலரவே பயன்படுகின்றன. சமய வாழ்வே பிறர் வாழத் தாம் துன்பமேற்கும் தியாக வாழ்வை உலகுக்கு அளிக்கின்றது. அப்பரும் மணிவாசகரும் இயேசுவும் நபியும் இந்த அடிப்படையிலேதான் தாங்கள் துன்பங்களையேற்று உலகை நல்வழியில் திருத்த முயன்றனர். இந்த முயற்சியின் பலனாலேயே மக்கட் சமுதாயம் ஓரளவு வாழ்ந்து கொண்டு வருகின்றது.

மனித வாழ்வுக்கு இன்றியமையாத வேண்டப்படும் தியாக வாழ்வு சமயத்தால் வளருகின்றது என்று அறிந்த பிறகும் 'அதை ஏன் போற்ற வேண்டும்?" என்ற வினாவுக்கு விடை காண்பது எளிதல்லவா! மற்றும் எத்துணை மாற்றங்களுக்கும் தண்டனைகளுக்கும் அஞ்சாது கொடுமை இழைக்கும் விலங்குணர்ச்சி உள்ள மக்கள் சிலர் மேலே கண்ணுக் கெட்டாத பொருளாக இருக்கும் கடவுள் இம்மையிலோ அன்றி மறுமையிலோ என்ன தண்டனை கொடுப்பாரோ என்று அஞ்சித் தம் கொடுமைகள் விடுக்க வழியுண்டல்லவா! இதை எண்ணித்தான் அப்பர் 'அஞ்சிலாகிலும் அன்பு பட்டாகிலும்' ஆண்டவனை நினைத்தால் போதும் என்கின்றார். எனவே நல்ல பண்பாட்டாளர்கள் உலகை வாழவைக்கப் பாடுபடுவதற்குச் சமயம் உதவும் அதே வேளையில் கல்லாதவர் திருத்தமுற்றுச் செம்மை நிலை பெறவும் சமயம் உதவுகின்றது என்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்கின்றோம். வள்ளுவனார் அன்புக்குக் கூறிய அந்த உண்மை சமயத்துக்கும் பொருந்துவதாகும்.

**'அறத்திற்கே அன்புசார்பென்ப**
**அறியார்**
**மறத்துக்கும் அஃதே துணை'**

என்ற குறளுக்குத்

தெளிந்த உரைகண்டார் பரிமேலழகர், அப்படியே சமயமும் அறவாழ்வை வளர்ப்பதோடு மறவாழ்வை மாற்றவும் உதவுகின்றது. இந்த நிலையில் சமயம் வேண்டாமென்று சொல்லவும் இயலுமோ!

சமயம் உலக வாழ்வுக்கு அப்பாற்பட்ட ஒன்று என்றும், காணாத இறைவனைப் பற்றி நாம் ஏன் கவலை கொள்ள வேண்டுமென்றும் சிலர் பேசுவர். அதனாலேயே அடியவர் மக்கள் வாழ்வின் அடிப்படைக்குத் தேவையான அன்பினையே கடவுளாகக் காட்டிப் போற்றி வழிபட்டனர்.

**'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிகிலர்'**

எனத் திருமூலர் எடுத்துக் காட்டியுள்ளார். எனவே சமயம் வாழ்வின் அடிப்படையான அன்பினைக் கொண்டு தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக வாழ்ந்து வையத்தையும் வாழவைக்கப் பயன்படும் ஒன்றேயாகும். இந்த உண்மையை உணராதாரே 'சமயம் வேண்டாம்' எனக் கூறுபவர். அவர்கள் அதனால் அன்பு, தியாகம், அறம், செம்மை, பண்பாடு அனைத்தும் வேண்டாம் என்று கூறுகின்றவரேயாவர். இவை அனைத்தும் நீங்கினால் உலகில் எந்த உயிராவது வாழுமா? எண்ணிப் பாருங்கள்? எனவே உலகில் அறம் வாழவேண்டுமானால் - செம்மை நலம் சிறக்க வேண்டுமானால் - அன்பு தழைக்க வேண்டுமானால் - அருளுணர்வு அரும்ப வேண்டுமானால் பண்பாடு உயரவேண்டுமானால் சமயம் போற்றப்பட்ட வேண்டியது தானே! மக்கள் இந்த உண்மையை உணர்ந்தே வாழ்கின்றார்கள். தளர்ச்சி அடையும் போது சமயத் தலைவர்கள் தோன்றி அவர்களைத் தூண்டி விடுகிறார்கள். அவ்வாறு தூண்டிய ஒளிவிளக்கேற்றிய நல்லவர் பாடிய பாடல்களே திருமுறைகள். அவை போற்றப் பெற வேண்டும் - ஆம் உலகம் செம்மையில் வாழத் திருமுறைகள் போற்றப் பெறத்தானே வேண்டும். போற்றுங்கள்! ஏத்துங்கள்! பொன்னார் நல்லுலகு பூக்க வழி கோலுங்கள்!

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமண தரிசனம்

நாவலப்பிட்டியில் ஒரு பிடவைக் கடையின் மேல்மாடி அறை ஒன்றில் வசித்த காலம். அதில் வேலை செய்யும் சில இளைஞர்கள் ஆத்மீக நாட்டம் உள்ளவர்கள். ஓய்வு நேரங்களில் அடியேனுடைய அறைக்கு வந்து ஆத்மீக சம்பந்தமாகவும் யோகம் சம்பந்தமாகவும் உரையாடும் வழக்கம் உண்டு.

ஒருநாள் சின்னத்தம்பி என்ற இளைஞர் ஒரு புத்தகத்தை மறைத்து வைத்துக் கொண்டு, இன்று உங்களுக்கு ஆத்மீகப் புதையல் ஒன்றை அறிமுகப்படுத்த விரும்புகிறேன் என்று "ரமண விஜயம்" என்ற நூலை அடியேனிடம் கொடுத்தார்கள். அந்த நூலைத் தான் மூன்று முறை வாசித்து விட்டதாகவும் அதை இன்னும் பலமுறை வாசித்தாலும் தாகம் அடங்காது போலிருக்கிறது என்றுங் கூறினார்கள்.

இளைஞர் கூறிய முன்னுரை அதைப் பல முறை வாசிக்க வேண்டும் என்ற எண்ணத்தை முதலிலேயே உண்டாக்கிவிட்டது. நூலின் மேலட்டையில் 'ரமண விஜயம்' என்று பெரிய எழுத்தில் இருந்தது. கீழே பார்த்தேன் யோகி சுத்தானந்த பாரதியார் என்று அச்சிடப்பட்டிருந்தது. உள்ளே திறந்தேன் ரமண பகவான் புன்சிரிப்புடன் காணப்பட்டார். அவருடைய புன்முறுவல் அடியேனை அப்படியே விழுங்கிவிட்டது.

அன்று வெள்ளிக்கிழமை. அடியேன் மாரி அம்பாளையும் கதிரேசனையும் தரிசித்துவிட்டு அடியேனுடைய அறைக்கு வந்தபோது தான் இந்த ஆத்மீகப் புதையல் கிடைத்தது. அன்றைய வழிபாட்டிலும் பிரார்த்தனையிலும் ஏதோ ஒரு இன்பம் அனுபவித்தது போன்று இருந்தது. காரணம் தெரியாத இன்பநிலையிலேதான் இந்த ஆத்மீகப் புதையலும் கிடைத்தது. சுமார் இருநூறு பக்கங்கள் கொண்ட அந்த நூலை இரவு மூன்று மணிக்குள் வாசித்து முடித்துவிட்டேன். அதன் பின்புதான் நித்திராதேவி ஆட்கொண்டாள். காலை சுமார் எட்டுமணி இருக்கும், இளைஞர் வந்து கதவைத் தட்டினார். இன்று சனிக்கிழமையோ என்று சொல்லிக் கொண்டே கதவைத் திறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ ஒரு புதிய உலகத்தில் வசித்த அடியேனுக்குச் சனிக்கிழமை என்ற வார்த்தைதான் இவ்வுலகிற்கு அழைத்து வந்தது. அடியேனுடைய மேசையின் மீது கிடந்த ரமண விஜயத்தை இளைஞர் கண்ணுற்றார். வாசிக்கத் தொடங்கி விட்டீர்களா என்ற வினாவை எழுப்பினார்.

இரவு 9 மணியளவில் வாசிக்கத் தொடங்கினேன். திறந்த புத்தகத்தை விடிய மூன்று மணிக்குத்தான் மூட முடிந்தது. அந்த ஆறுமணித்தியாலமும் மனம் எங்கும் ஓடவில்லை. நீங்கள் தந்த ஆத்மீகப் புதையலுக்குள்ளேயே புதைந்து விட்டது. ஆறு மணித்தியாலமும் ஒருவகைத் தியானம் என்றே கூறலாம்.

சனியும் ஞாயிறும் எங்கும் செல்லவில்லை. பகவான் ரமணரும் யோகி சுத்தானந்தரும் தம்முடனேயே இருக்கச் செய்து விட்டார்கள். திங்கள் காலையில் பாடசாலை செல்வதற்காக மேல் மாடியிலிருந்து கீழ் இறங்கிய போது இளைஞரிடம் நூலை நீட்டினேன். எத்தனை முறை வாசித்தீர்கள் என்று கேட்டார். குறைந்தது ஏழு முறையாவது வாசித்திருப்பேன் என்று கூறினேன்.

வாசித்தேன், படித்தேன் என்று சொல்வது அபசாரம். ரமண விஜயத்தைத் தியானித்தேன் என்று தான் சொல்ல வேண்டும். ரமண விஜயத்திற்கூடாக ரமணரையும் சுத்தானந்தரையும் தரிசித்தேன். உள்ளத்தில் இருவரும் பேரொளிப் பிழம்பாகத் திகழ்ந்தனர்.

சில நாட்கள் அவர்கள் திரு உருவங்களே உள்ளத்தை நிரப்பிக் கொண்டிருந்தன. இதைத்தான் அப்பர் சுவாமிகள்

**"உயிராவண்ணம் இருந்து உள்ளக் கிழியின் உரு எழுதி"** என்றும் **"உற்றுநோக்கி உள்ளக்கிழியின் உரு எழுதி"** என்றும் கூறினாரோ என்று அடியேன் அப்பரை அகத்தில் நினைந்தேன்.

இன்றுந்தான் அந்தத் தியானம் ஒளியாகத் திகழ்கின்றது.

ரமண விஜயம் மனதில் ஒரு தாகத்தை உண்டாக்கி விட்டது. ரமண தரிசனம் பெறவேண்டும், சுத்தானந்தரைக் காண வேண்டும் என்பது தான் அந்தத் தாகம். "விநாயகனே வேட்கை தணிவிப்பான்" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தா் ஒருவா் கூறியது போல ரமண தரிசனந்தான் வேட்கையைத் தணிவிக்கும் என்று உணா்ந்தேன்.

இலங்கையும் இந்தியாவும் சுதந்திரம் பெறாத காலம். பாஸ்போட் விசா, செலாவணி ஒன்றும் இல்லாத காலம். அடியேன் ஒரு மாா்கழி மாத விடுமுறையில் திருவண்ணாமலை யாத்திரையை மேற்கொண்டேன். 31 ரூபாவுக்கு ரிக்கெற் ஒன்று எடுத்தால் ஒரு மாதத்திற்குள் தென் இந்தியாவில் எந்த இடத்திற்கும் பிரயாணம் செய்யலாம் என்றிருந்த காலம்.

தலைமன்னாரிலிருந்து கப்பலிலேதான் தனுஷ்கோடி செல்ல வேண்டும். கப்பலில் ஏறினவுடன் அடியேன் வைத்திருந்த இலங்கை நோட்டு நூறு ரூபாயைக் கொடுத்தேன். இந்திய நோட்டில் நூறு ரூபா தந்தாா்கள். நாவலப்பிட்டி புகையிரத நிலையத்தில் திருவண்ணாமலைக்கு ரிக்கெற் கேட்ட போது அவா் கணக்குப் பாா்க்கிற சோம்பல் தனத்தில் 'தனுஷ்கோடி வரைக்கும் ரிக்கெற் தருகிறேன். நீங்கள் அங்குச் சென்று ரிக்கெற் எடுக்கலாம். செலவு ஒன்றுதான்' என்றாா்.

தனுஷ்கோடியில் ரிக்கெற் பெறுவதற்கு நாலைந்து போ் வரிசையில் நின்றாா்கள். அடியேனும் அவா்கள் வரிசையில் நின்றேன். அடியேனுடைய முறை வந்த போது திருவண்ணாமலைக்கு ரிக்கெற் என்றேன். அதற்கு அவா் திருக்காா்த்திகையை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு ரிக்கெற் கொடுப்பதை மட்டுப்படுத்தியிருக்கிறாா்கள் என்றாா். அப்படியானால் திருவண்ணாமலைக்கு அடுத்த புகையிரத நிலையத்திற்குத் தாருங்கள் என்றேன். அவா் சிரித்துவிட்டு எட்டு அணா வைத்துக் கொடுங்கள் என்றாா். முதலில் அவா் கேட்டது எனக்குப் புரியவேயில்லை.

அடியேன் கொடுத்த பணத்தில் ரிக்கெற் பணத்திற்கு மேலாக எட்டு அணா மாத்திரம் எடுத்துக் கொண்டு மீதிப்பணத்தையும் திருவண்ணாமலைக்குரிய ரிக்கெற்றையும் தந்தாா். பெரிய புகையிரத நிலைய அதிபா் எட்டு அணா வாயாற் கேட்டு வாங்கினாரே என்று அதிசயப்பட்டேன்.

புகையிரதப் பெட்டியில் ஏறியவுடன் ஒன்றரை அணாவுக்கு ஒரு சம்பாா்ச் சாதமும் ஒன்றரை அணாவுக்கு ஒரு தயிா் சாதமும் வாங்கினேன். முழுவதையும் அடியேனால் உண்ணவே முடியவில்லை. பாதி பாதி தான் உண்ண முடிந்தது. மீதியைக் கீழே நின்றவா்களிடம் கொடுத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையிரதத்தில் பலர் சிநேகிதமானார்கள். மானா மதுரையில் ஒரு பையன் ஏறினார். அவர் திருவண்ணா மலைக்குக் கார்த்திகைத் தீபத்திற்குச் செல்பவர். இருவரும் ஒருவருக்கொருவர் துணையானோம். ரமண பகவானுடைய பெயரையே அவர் கேள்விப்பட்டதில்லை. நீர் ரமண பகவானையும் தரிசிக்க வேண்டும் என்று சொல்லி வைத்தேன். இருவரும் ரெயில் சிநேகரானோம்.

எழும்பூரில் புகையிரதம் மாறி ஏற வேண்டும். அங்கிருந்து ஒரு பெட்டி இணைப்பார்கள். நண்பருக்கு இவை எல்லாம் நல்ல அனுபவம். பலமுறை தீருவண்ணா மலைக்கே சென்ற அனுபவமும் உண்டு. இருவரும் புகையிரத மேடைக்கே வராமல் அந்தப் பெட்டி நின்ற இடத்திற்குத் தண்டவாளத்தைக் கடந்து சென்றோம். போட்டர் எங்கள் இருவரையும் வந்து பிடித்துக் கொண்டான். தண்டவாளத்தைக் கடந்து செல்லக்கூடாது என்பது தெரியாதோ என்றான். நாங்கள் தெரியாது என்றோம்.

எங்கள் இருவரது ரிக்கெற்றுகளையும் வாங்கி வைத்துக் கொண்டான். ஒரு வாங்கில் உட்காரச் சொன்னான். நாளைக் காலை 9 மணிக்கு பஞ்சாயத்தில் கொண்டு போய்ச் சேர்ப்போம். அவர்கள் சொல்லும் தண்டத்தைக் கொடுத்துத்தான் நாளை இரவு நீங்கள் பயணம் செய்யலாம் என்றான். நான் புகையிரத நிலைய அதிபரிடம் முறையிடுவோம் வா என்று பையனை அழைத்தேன். காந்தி பிறந்த ஊரில் இந்த அநியாயமா என்றேன்.

இதற்கிடையில் ஒரு ரூபாவைக் கொடுத்து ரிக்கெற் பெற்றுச் செல்லுங்கள் என்று புத்தி கூறினான். அவன் பேசிய விதத்தில் அவனுடைய ஆள் என்று தெரிந்தது. புகையிரதம் புறப்படும் வரை ரிக்கெற்றை வைத்திருந்து புகையிரதம் போன பின்பு ரிக்கெற்றைத் தருவான். ஒரு முழுநாள் வீணாகக் கழியும் என்று அவனும் புத்தி கூறினான்.

அடியேனோடு கூட வந்தவர் ஒரு ரூபாவைக் கொடுத்து ரிக்கெற்றைப் பெற்றுக் கொண்டார். இப்பொழுது நாங்கள் எப்படிப் போவது என்று கேட்டேன். தாங்கள் பார்த்துக் கொள்வதாகவும் தண்டவாளத்தைக் கடந்து செல்லலாம் என்றும் கூறினான்.

திருவண்ணாமலை போய்ச் சேர்ந்தோம். குளத்தில் இறங்கி நீராடினோம். பகவான் ரமணரும் இந்த குளத்தில் நீராடித்தான் துறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூண்டார். அதனை நினைக்கும் போது உடம்பு புல்லரித்தது. கோயிலினுள்ளே சென்று ஒரு ஐயரிடம் எட்டு அணாவைக் கொடுத்து அர்ச்சனை என்றேன். அவர் கோத்திரம் என்ன என்றார்? அடியேன் கோத்திரமும் சூத்திரமும்தான்; சுவாமி பேரில் அர்ச்சனை என்றேன். அவர் உடனே கோத்திராய நம, சூத்திராய நம என்று மந்திரத்தை ஆரம்பித்தார். அழுவதா? சிரிப்பதா என்றுதான் தோன்றியது. சினிமாப் பாட்டு ஒன்று நினைவுக்கு வந்தது. 'சிலர் சிரிப்பார், சிலர் அழுவார் நான் சிரித்துக் கொண்டே அழுகின்றேன்' என்பதுதான் அந்தப் பாடல். அடியேனும் சிரித்து அழுது கொண்டே ரமணாச்சிரமம் போய்ச் சேர்ந்தேன்.

அங்கு சென்றதும் ரமண பகவானுடைய தரிசனத்திற்கு முன் பகவானுடைய தம்பியார் சர்வாதிகாரி என்று அழைக்கப்படும் நிரஞ்சனாநந்தரைச் சந்தித்தேன். இலங்கையில் இருந்து வருவதாகவும் இரண்டு வாரம் தங்குவதற்கு ஒரு அறை வேண்டும் என்றும் கூறினேன். பகவானுடைய பிறந்த தினம் இன்னும் பத்து நாட்களில் வரப்போகிறது. பல தேசங்களிலிருந்தும் வருவார்கள். ஆதலால் ஒரு நாள் மாத்திரம் தங்கலாம் என்றார்.

அடியேன் 25 ரூபாயைக் கொடுத்து, 'இதனை ஆச்சிரம வளர்ச்சிக்காக வைத்திருங்கள். அடியேன் நகரத்தில் ஒரு ஹோட்டலில் தங்கித் தினமும் இங்கு வந்து செல்கின்றேன்' என்றேன். அவர் சிரித்துவிட்டு 'உங்களைப் போன்றவர்கள் தங்குவதற்காகத்தானே பகவானுடைய ஆணைப்படி அறைகள் கட்டியுள்ளோம். பகவானிடம் இலங்கையிலிருந்து வந்து நீங்கள் ஹோட்டலில் தங்கினால் ஆச்சிரமத்திற்கே இழுக்கல்லவா?' என்று கூறி நீங்கள் எத்தனை நாள் ஆனாலும் தங்கலாம் என்றார்.

அடியேன் மகிழ்வுடன் அவர் காட்டிய அறையில் அடியேனுடைய பெட்டியைப் பத்திரப்படுத்தி வைத்து விட்டு பகவான் இருந்த மண்டபத்தை நோக்கிச் சென்றேன். மண்டபத்தில் சுமார் 300 பேர் அளவில் தியானத்தில் அமர்ந்திருந்தார்கள். அந்த அறையினுள்ளே காலடி வைத்ததும் ஒரு ஆத்மிக அலைக்குள்ளே அடியேன் இருப்பதை உணர்ந்தேன். வாசலில் கால் வைக்கும் போதே பகவான் இருக்கும் இடத்தை உற்று நோக்கினேன். ஒரு திருநீற்றுக்குவியல் போல் பகவானுடைய தோற்றம் இருந்தது. பகவானுடைய காந்தம் போன்ற கண்களுடைய பார்வை அடியேனுடைய உள்ளத்தையும் ஊடுருவிச் சென்றது. இந்த அனுபவத்தைச் சொற்களாற் சொல்லமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரியார் ஓரிடத்தில்

**"எல்லாம் அற என்னை இழந்த நலம்**
**சொல்லாய் முருகா"**

என்கின்றார். வாய்விட்டுப் பேசொணாதது.

**"சும்மா இரு சொல்லற என்றலுமே**
**அம்மா பொருளொன்றும் அறிந்திலனே"**

என்ற இடம் அது தான் போலும்.

அடியேனும் அடியார் மத்தியில் தியானத்தில் அமர்ந்தேன் எவ்விதக் கஷ்டமுமின்றி மனம் தியானத்தின் ஆழத்திற்குச் சென்று விட்டது. எவ்வளவு நேரம் அப்படி இருந்தேனோ தெரியாது. மணி பன்னிரண்டுக்குக் கோயில் மணி ஓசை கேட்டு எல்லாரும் தியான நிலையினின்று இவ்வுலக நிலைக்கு வந்தனர்.

சாப்பாடு மண்டபத்தை நோக்கி நகர்ந்தனர். அந்தணர்களுக்கு ஒரு பக்கமாகவும் மற்றையோருக்கு ஒரு பக்கமாகவும் உணவு பரிமாறப்பட்டது. பகவான் அந்தணர் அல்லாத பக்கத்திலிருந்தே உணவுண்டார். உணவு படைக்கப்பட்டதும் பகவான் அவ்வுணவை நன்கு பிசைந்து சிறு சிறு உருண்டைகளாக்கி உண்டார். முடிவில் அந்த இலையை விரலால் வழித்து வழித்து உண்டதால் முதலில் போடப்பட்ட இலை போலப் பரிசுத்தமாகவே காணப்பட்டது. ஒரு சோற்றுத் துகள் கூடக் காணப்படவில்லை. அந்த இலையில் வேறொருவர் உண்ணலாம் போன்றிருந்தது.

ஒருமுறை ஒரு அன்பர் எறும்புகள் நாங்களுக்காவது மிச்சம் உதவுமே என்றார். அதற்குப் பகவான் 'உமக்கு நாய் மீதும் எறும்பு மீதும் அன்பு உண்டா' என்று கேட்டார். அவர் உடனே 'ஆம்' என்றார். 'அப்படியானால் முதலில் உமது நாய்க்கு உணவு வைத்தே நீர் பின்பு சாப்பிட வேண்டும். எறும்பின் மீது அன்புண்டானால் எறும்புப் புற்றுக்குள் சிறிதளவு உணவைக் கொண்டு போய் போட்டு விட்டு நீர் பிறகு சாப்பிடும்' என்றார். இதற்கு அந்த அன்பரால் எவ்வித மறுமொழியும் கூறமுடியாது மௌனியானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமணாச்சிரமத்தில் அதிகாலை மூன்று மணிக்கே வெந்நீர் தயாராகிவிடும். வெந்நீரில் ஸ்நானம் செய்து விட்டு நான்கு மணிக்குள் பகவான் தங்கி இருக்கும் மண்டபத்தில் தியானத்தில் அமர்ந்தால், காலை ஏழு மணிவரை செய்யும் தியானம் அற்புதமானது. அம்மண்டபத்துள் எல்லோரும் தியான சொரூபிகளாகவே காணப்படுவர். இந்த நிலையை அவரவர் அனுபவிக்கலாமே தவிர பிறருக்கு வாய்விட்டுப் பேச முடியாது.

பகவானிடம் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இலட்சுமி என்ற பசு வந்து செல்லும். அவர் தடவிக் கொடுத்து ஒரு பழம் கொடுத்தால் தான் அவரை விட்டு அகலும் அவருடைய ஸ்பரிசத்தில் அப்பசு மெய்மறந்து நிற்கும் நிலை பார்ப்போர் உள்ளத்தில் பக்தி உணர்வைத் தூண்டும். அப்படி இறந்த போது பகவானே தமது கையினால் சமாதி வைத்த காட்சி இன்னும் உள்ளதை விட்டு அகலவில்லை.

ஒருமுறை பொண்டிச் சேரியில் கவர்னராக இருந்தவரின் பிரத்தியேக காரியதரிசி திருவண்ணாமலைக்கு வர வேண்டியிருந்தது. அப்பொழுது சுவாமி சுத்தானந்த பாரதியார் அரவிந்தாச்சிரமத்தில் மோனத் தவம் புரிந்து கொண்டிருந்தார்கள். காரியதரிசி சுத்தானந்தரிடம் சென்று தான் அண்ணாமலை செல்லப் போவதாகவும் அங்கு என்ன பார்க்க வேண்டும் என்று கேட்டார்.அதற்குச் சுவாமிகள் உமது அரசியல் கடமைகள் எல்லாம் முடிந்த பின் நகரத்திலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் ரமணாச்சிரமம் என்று ஒன்றிருக்கிறது. அங்கு சென்றால் ஒரு தவமுனிவரைக் காணலாம். அவரைத் தரிசித்து வாருங்கள் என்றார்.

காரியதரிசி வழி நெடுகிலும் சுத்தானந்தர் கூறிய தவமுனிவரையே நெஞ்சத்தில் சுமந்து சென்றார். ரமணாச்சிரமம் சென்றதும் பண்டைத் தவமுனிவர் ஒருவரைத் தரிசித்த திருப்தியைப் பெற்றார். இவருக்கு ஆங்கிலம் நன்குவராது. பிரான்சிய மொழியில் தான் எழுதிச் சென்ற கடிதத்தைப் பகவானிடம் கொடுத்துக் கைகட்டிக் கொண்டு நின்றார். பகவான் தனது சிஷ்யரிடம் கூறி அவர் இருப்பதற்கு ஒரு நாற்காலி போடச் செய்தார். இப்படி யாருக்கும் பகவான் நாற்காலி போடச் செய்ததே கிடையாது.

பகவான் அக்கடிதத்தை முன்னாலிருந்த வெள்ளைக்காரர் ஒருவரிடம் கொடுத்தார். அவர் அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினார். "எனக்கும் ஆத்மீகத்தில் முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது. ஆனால் இந்த ஆணவம் அதனைத் தடுக்கிறது. சுவாமிகள் என்மீது கருணை கூர்ந்து அருள் பாலிக்கவேண்டும்" என்பதுதான் அக் கடிதத்தின் சாரம்.

அடியேனுக்கு அன்றையத்தினம் முதல்வரிசையில் முதலாம் ஆளாக இருந்து தியானம் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. பகவானுடைய முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தேன். பகவானுடைய கண்ணிலிருந்து ஒரு ஒளி காரியதரிசியின் முகத்தில் பாய்ந்ததைக் கண்டேன். காரியதரிசி அக்கணமே அடியற்ற மரம் போல வீழ்ந்திருக்கக் கண்டேன். காரியதரிசி பகவானைக் கைகூப்பி வணங்கினார். அந்த வெள்ளைக்காரரிடம் தான் பகவானை நாடி வந்த காரியம் கைகூடி விட்டதாகவும் பகவான் மேற்கொண்டு ஏதாவது கூறினால் அதனை எழுதி அனுப்புங்கள் என்று சொல்லிவிட்டு மோட்டாரில் ஏறித் தன் வழியே சென்று விட்டார். இவை எல்லாம் சுமார் ஐந்து நிமிட நேரத்திற்குள் நடந்த செயல்களாகும். ஆன்மாவின் பக்குவ நிலைக்கேற்பவே இறைவனும் ஆட்கொள்ளுகின்றான்.

பகவான் சமாதி அடையும் தருணம் வந்துவிட்டது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் மண்டபத்தின் உள்ளேயும் புறம்பேயும் கூடியிருந்தனர். அன்றைய தினம் அக்காட்சியைக் காணும் பாக்கியம் அடியேனுக்கும் கிடைத்தது.

பகவானுடைய கட்டிலுக்கு மேலுள்ள கூரையினூடாகச் சோதி ஒன்று புறப்பட்டு வடதிசையாகச் சென்று மறைந்ததை வெளியிலிருந்தவர் கள் அத்தனை பேரும் கண்டு களித்தனர். ரமணசோதி மறைந்து விட்டது. உள்ளே இருந்தவர்களுக்கு வெகு நேரத்தின் பின்தான் நடந்த விஷயம் தெரிய வந்தது.

சுந்தரர் திருக்கைலை சென்றபோது உபமன்யு முனிவர் அவரைச் சோதியாகத் தரிசனை செய்த சம்பவத்தை இச்சம்பவம் நினைவூட்டு கின்றது.

**(ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் ஸ்தலயாத்திரை வரலாறு தொடரும்)**

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பிரணவ (உ) வடிவம்

விநாயகர் பிரணவ ஸ்வரூபி துதிக்கையோடு இருக்கிற அவரது சிரசு கையிலே இருக்கும் படியான மோதகம் இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் பிரணவத்தின் வடிவம் மாதிரியாக இருக்கும் அந்தப் பிரணவத்தை புருவத்தின் மத்தியில் தியானம் பண்ணிக்கொண்டு ஔவையார் பண்ணின கிரந்தம் தான் விநாயகர் அகவல் யோக சாஸ்திரம். தியானம் பண்ணுகிற முறை எல்லாம் அதில் இருக்கின்றன. தடைகளை நீக்கி பூர்ண அனுக்கிரஹம் செய்கிற அழகான குழந்தை தெய்வமான விநாயகரைத் தியானம் செய்வோம். ( கா. பெ)

இறைவன் ஏன் அவதரிக்கிறார் இப்புவியின் மாந்தர்கள் அன்பெனும் அமுதத்தைப் பருகவும் தெய்வீகத்தின் இனிமையை அவர்கள் உணர்ந்தறியவும் தான் அவதாரம் நிகழ்கிறது. இந்த இனிய அமுதத்தைச் சுவைத்தவர் தம்மை மறந்து இறைவனுடன் ஐக்கியப்படுத்திக் கொள்ள முயன்று அதன் பின்னர் இடையறாத ஆனந்த நிலையை அனுபவிக்கின்றார்.

மனித இதயங்கள் எப்போதெல்லாம் அதர்மத்தாலும் அன்பின்மையினாலும் வறண்டு போகிறதோ அப்போதெல்லாம் அன்பின் விதைகளை ஆழமாக ஊன்றி அன்புத்தத்துவத்தை செழித்து பரவச் செய்யவே இறைவன் அவதரிக்கிறார்.

(ச.சா.பா)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குகஸ்ரீ வாரியார் சுவாமிகள்

## கந்தபுராணத் தொடர்ச்சி ....................

நந்தியங் கடவுள் "மதன! இத்திருமலைக்கண் நீ வந்த காரணம் யாது? என்ன, மதனன் 'பிரமன் தனக்குக் கூறிவிடுத்த நிகழ்ச்சிகளை உரைக்க, நந்திதேவர், "பிரமாதி தேவர்கள் தமக்குற்ற துன்ப நீக்கத்தின் பொருட்டு இவனை இங்கு விடுத்துள்ளார்கள்; சிவபெருமான் மோன நிலையில் அமருங்கால் "யார் வந்தாலும் உள்ளே விட வேண்டாம், மன்மதன் ஒருவனை மட்டும் விடுக்குதி" என்றருளினர்.

மந்திர சக்தியால் பசுவைத் தடிந்து வேள்வி புரிந்து மீளவும், அப்பசுவை எழுப்புதல்போல் மன்மதனை எரித்து, மலைமகளை மணந்து பின்னர் இவனை எழுப்புமாறு எம்பெருமான் நினைத்தான் போலும்" என்று நினைத்து, "மாரனே! சிவமூர்த்தியின் பால் செல்லுதல் வேண்டுமோ?" என, மன்மதன், "எந்தையே! என்னுயிர்க்கு இறுதி வரினும் பொன்னார் மேனிப் புரிசடையண்ணலிடம் சேருமாறு வந்தனன்; அவ்வெண்ணத்தை நிறைவேற்ற வேண்டும்" என்றனன்.

நந்திதேவர், "மலர்க்கணைக்கிழவ! தேவதேவன் முன் செல்லுதற்கு உன்னுதியேல் மேலைக் கோபுர வழியாகச் செல்லுதி" என்றனர்.

மன்மதன் அவரை வணங்கி விடைபெற்று, மேலை வாயிலின் உள்சென்று, சோதிமாமலைபோல் வீற்றிருக்கும் சூலபாணி முன் சென்றனன். ஒப்பற்ற சாபத்தைக் கண்ட சிங்கக் குட்டி போல வெருவுற்று உள்நடுங்கி மெய்வியர்த்து கரத்திற் பற்றிய படையுடன் அவசமுற்று வீழ்ந்தான்.

உடனே இரதிதேவி கரத்தாற்றாங்கி "இறந்தனன் கொல்" என்று நெஞ்சங் கவன்று தேற்றினன். மதனன் அவசம் தெளிந்தெழுந்து, "அந்தோ! அடியேன் என்ன காரியம் செய்யத் துணிந்தேன் நகையால் புரமூன்றும் எரித்த நம்பனை எதிர்த்துப் போர் புரியுமாறு பிரமதேவன் என்னை இங்கனுப்பினர். இன்றே எனக்கு அழிவு வந்தது என்பதில் சிறிதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயமில்லை. எண்குணத்திறைவனாம் ஈசனைக் கண்டவுடனே உள்ளம் வெருவி என்னுயிரை இழந்தவன் போலாயினனே? இனி எதிர்த்துக் கணைகளைப் பொழிந்தால் உய்குவனோ? கணைகள்தான் இறைவனை வெற்றி பெறுமோ? இதனைத் தேவர்கள் அறிந்திலரே.

பெருஞ் சண்டமாருதத்தின் முன் ஒரு சிறு தீபம் நிற்கவல்லதோ? அது போல் வாக்காலும் மனத்தாலும் அளக்க முடியாத வள்ளல் முன் என்னைத் தேவரனுப்பினர். இன்னும் சின்னேரத்தில் இப்பெருமானது நெற்றிக்கண் பார்வையால் வெந்தழியப் போகிறேன். சகல லோகங்களையும் இமைப்பொழுதில் நீறு செய்யும் நிமலனைப் பூமலர்க்கணை கொண்டு போர்புரிய வந்தது நகைப்புக்கிடமன்றோ? விதியைக் கடக்கவல்லார் யார்? அயனாதி அமரராலும் விதியை வெல்ல முடியாதல்லவா? இதனைக் கூர்ந்து நோக்கின் குன்றுவில்லியின் செயலே போலும்? இக்கருமம் எவ்வாறு முடியுமோ? இறைவன் திருவருள் எங்ஙனமோ அங்ஙனம் முடிக; இனி தாமதியாது எண்ணியதை முடிப்பன்" என்று பலவாறு நினைந்து கரும்புவில்லை வளைத்துச் சுரம்பு நாணேற்றித் தண்மலர் கணைகளைப் பூட்டி மதிநதிச் சடைப்பெருமான் முன்சென்று நின்றான்.

இது நிற்க, மனோவதி நகரத்தில் மலரவனை இந்திரன் இறைஞ்சி, "எண்தோள் இறைவன்பால் மதனனைத் தனித்தனுப்பினீர்; அவனுடைய போர்த்திறத்தைக் காணும் பொருட்டு நாமும் போவோம்" என்றனன். பிரமன் எழுந்து தேவர் குழாத்துடன் புறப்பட்டுக் கயிலை மலையை அணுகி மன்மதனுடைய செயலை நோக்கி மழுக்கரத்து அண்ணலை வழுத்தி நின்றனன். மதனன் சிவபிரான்மேல் குறிபார்த்து ஐந்து மலர்க்கணைகளையும் விடுத்தனன். மதனனால் விடப்பட்ட மலர்ப்பகழிகள் சிவபிரான்மேற் படுதலும் பரமேஸ்வரன் தனது நெற்றிக்கண்ணைச் சிறிது திறந்து மன்மதனை நோக்க, அவ்விழியினின்றுந் தோன்றிய சிறு தீப்பொறியானது மன்மதனது உடலை எரித்தது, அதனால் உண்டாகிய புகை கயிலைமலை முழுவதும் சூழ்ந்தது.

**விட்டவெம் பகழி ஐந்தும் வியத்தகு விமலன் மீது**
**பட்டலும் சிறிதே வேளைப் பார்த்தனன் பார்த்த லோடும்**
**கட்டழல் பொதிந்த நெற்றிக் கண்ணது கடிதே காமற்**
**சுட்டது கயிலை முற்றுஞ் சூழ்புகை பரவிற்று அன்றே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரி அயனாதி அமரர்கள் பாற்கடலைக் கடைந்தபோது ஆலகால விடந்தோன்றியதுபோல் புகையுந் தீயும் பரவலுற்றன. கீழ்க்கோபுரவாயிலில் காவல் பூண்டுள்ள நந்திதேவர் அதனைக்கண்டு, மதனன் மடிந்தான் என்று நினைந்து, அங்குள்ளார்களுக்கு உரைப்பார்.

அறிவின் மிக்கீர்! கண்ணுதற்கடவுள் முன் சென்ற மன்மதனைச் சிவபெருமானது நெற்றிக்கண் சுட்டதென்று நினையாதீர்கள்; அருட்பெருங் கடலாம் அரனாரை மலர்க்கணையால் மயக்குவனென்று எழுந்துவந்த மறச்செயலே அவனைச் சுட்டு விட்டது; இனி தனது பதி இறந்த தன்மையைக் கண்டு இரதிதேவி அக்கினியில் வீழ்ந்த மலர்மாலைபோல் வாடி, கறைமிடற்றண்ணலை வேண்ட, நம் கருணையங் கடவுள் "மன்மதனை மீளவும் எழுப்பித் தருகுவன்; இதனை நீவிர் காண்மின்" என்று கூறினர். இதனைக் கேட்டோர் உலகமுய்யும் பொருட்டாக காமனை எரித்த கருணாகரக் கடவுளது அருட்செயலை உன்னி மனமொழி மெய்களால் சிந்தித்து வாழ்த்தி வந்தித்திருந்தனர்.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளான முக்கட் பெருமான் முன்னொரு காலத்தில் தனது அடியாராகிய மூவரையும் எரிக்காது விடுத்து முப்புரத்தை மட்டும் எரித்ததுபோல், தென்றல் தேருடைய மதனனை மட்டும் எரித்து, அவனுடன் சேர்ந்துவந்த குற்றமில்லாத இரதிதேவியை எரிக்காது விடுத்தனர். மன்மதனுடைய உடல் முழுவதும் வெந்து வீபூதி போலான பின் எம்பெருமான் பண்டு போல் மோனநிலையில் வீற்றிருந்தனர். எல்லாம் செய்யவல்ல இறைவற்கு இஃது அருமையான கருமமோ?

கணவன் ஒரு கணத்தில் மாய்ந்த தன்மையைக் கண்டு இரதிதேவி அளப்பருந் துன்பமாகிய ஆழ்கடலில் ஆழ்ந்தனள்; கண்ணீர் ஆறுபோல் ஓடிற்று; சரீரம் வியர்த்தது; நாசிநெட்டுயிர்த்தது; ஆவி ஒடுங்கிற்று; இவளும் நாயகனுடனே மடிந்தாளென்ன பார்த்தவர் பதைபதைத்து உருக நிலத்தின் மேல் வீழ்ந்து மூர்ச்சித்தனள். நெடும் பொழுதுக்குப்பின் ஒருவாறு உணர்வு வந்தெழுந்து, இரு கரங்களையும் வயிற்றின் மீது அறைந்து வாய்விட்டுக் கதறுவாளானாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருமகளீன்ற செல்வப்புதல்வரே! உயிர்க்குயிரானவரே! நாராயணரது நற்றவக் குமாரரே! சம்பராசுரனுடைய உயிரைக் குடித்த தனிப்பெரும் வீரரே! கரும்பு வில்லைப் பிடித்த கரதலமுடையவரே! அழகிய பவளமலை போன்ற பரமசிவனாரது நெற்றிக்கண்ணால் வெந்து அழிந்தீரே! தேவர்கள் கண்களெல்லாம் இனியாவது தூங்குமோ? அம்புயமேல் வைகும் அயனாரும் அகமகிழ்ந்தனரோ? திரிபுரத்தை நகையாலெரித்த சிவபெருமான் மேல் மலர்க்கணை செலுத்தச் செல்லுதல் முறையல்ல வென்று அடியாள் எத்தனை முறை சொல்லியும் கேளாமற் போயினீரே! தேவகாரியஞ் செய்வதையே பெரிதாகத் துணிந்தீரே! உமது திருமேனி நீறாக வெந்தழிந்ததே! இதனைக் கண்டும் சகிப்பாருளரோ! என் ஆருயிராகிய தாங்கள் மடிந்தபின் யான் தனித்திருப்பனோ? பரமன் விழி மாறுதலை அடையவும், உமது ஆற்றல் அழிந்து போகவும், உடல் நீறாகவும், தேவர்கள் மனம் வருந்தவும் தணியாத பெருந்துன்பத் தீ என் மனத்தில் மூளவும் தாங்கள் எவ்விடம் ஒளிந்திருக்கின்றீர்? உருவத்துடன் வராதொழியினும் அருவாகவேனும் வந்துகூற மாட்டீரோ?

என் ஆருயிர்த்துணைவரே! அடியாள் செய்த குற்றம் ஏதாவது உளதோ? எண்தோள் பரமனது திருக்கண்ணால் எரிந்து தாங்கள் இறந்த இப்பழியானது தேவர்களிடத்திற் சென்றதோ? இந்திரன் பாற் சென்றதோ? உம்மை இக்கருமத்தில் ஏவிய நான்முகன் பால் சென்றதோ? அரனாரது மோனநிலையை மாற்றுவனென்று வந்த தங்களிடத்தில் சென்றதோ? யாரிடஞ் சென்றதோ? முப்புரமெரித்த முழு முதற் கடவுளது யோகத்தைத் தவிர்க்குமாறு உன்னை வேண்டிய தேவர்கள் எல்லோருமா இறந்தனர்? என் அருமைக் கணவா! தாங்கள் ஒருவரே அன்றோ உயிர்துறந்தீர். தேவர்கள் தங்களைக் கொல்லாமற் கொன்றனரே; என்னுயிரையுங் கொலை செய்தனரே; பொல்லாதவர்க்கு நன்றி செய்தல் தம்முயிர்க்கல்லவோ முடிவு நேரும்? யான் முற்பிறவியில் என்ன தீவினை செய்தேனோ? என்னைப் போன்ற இளமகளிர்க்கு யாது தீங்கு புரிந்தேனோ? விதியை யாரே அறியவல்லார். அன்பிற்கு உறைவிடமே! என்னை ஆண்டருள்புரிவீர். நெருப்புக் கண்ணுடைய நிமலனை நோவதற்கு என்ன ஞாயமுளது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொன்செய்தார் முடிகாணேன் அழகொழுகுந் திருமுகத்துப்**
**பொலிவு காணேன்**
**மின்செம்பூண் அணிகுலவும் புயங்காணேன் அகன்மார்பின்**
**மேன்மை காணேன்**
**கொன்செய்பூங் கணைகாணேன் சிலைகாணேன் ஆடல்புரி**
**கோலங் காணேன்**
**என் செய்வேன் என்கணவா என்னையொழித் தெவ்விடத்தே**
**இருக்கின் றாயே.**

உயிர்த்துணைவரே! ஆதி நாளையில் அக்கினி சாட்சியாக அரி அயனாதி அமரர்கள் முன்னர் எனது கழுத்தில் மங்கல நாண்பூட்டி என்னை மணஞ்செய்து கொண்ட போது, "எந்நாளும் உன்னைப் பிரியேன்" என்று சத்தியம் செய்தீரே. அச்சரத வாக்கியத்தை மறந்து என்னைத் தனியே விடுத்து நீங்குதல் தருமமோ? சிவமூர்த்தியிடஞ் செல்வாயென்று தங்களை அனுப்பிய தேவர்கள் இப்போது தங்களை எழுப்ப மாட்டார்களோ? தங்களுடைய தந்தையாகிய நாராயணரை வல்லமை உடையவரென்று கூறுகின்றனரே? அவருடைய மருமகளாகிய அடியாள் ஓவென்று கதறியழுவதைக் கண்டு ஓடிவந்தாரில்லை; நித்திரையில் இருக்கின்றார் போலும்! வெந்தழிய வேண்டுமென்று தமது தலையில் விதித்திருந்தால் அவர்களை எல்லாம் வெறுப்பதில் என்ன பயன்?

அருமைக்காதலரே! மறைபயிலும் மலரவனையும், மகபதியையும், தங்களை ஈன்ற மாயவனையும், முனிவர்களையும் மற்றுள்ள யாவரையும் தமது மலர்க்கணையால் மயக்கி வெற்றி பெற்றீர்; அது போல், ஆலமுண்ட அண்ணலையும் நினைத்து அனலிடைப்பட்ட விட்டிற் பூச்சிபோல் இவ்வாறு அழிவுற்றீர். குளிர்ந்த பனிநீர் விசிறிக் கொண்டு விளையாடி மலர் கொய்து நந்தவனத்திடை சென்று பூவணைமிசை தென்றல்காற்று வீச சந்தனச்சேறாடி நாம் இருவரும் கருத்தொருமித்து ஓருடலென ஒருமித்து வாழ்ந்து இன்ப வாழ்வெல்லாம் கனவு கண்டாப்போலாயிற்று. மருமகனென்று அவமதித்த தக்கனது மகத்தை அழித்த வள்ளலாகிய மதிமுடிப்பரமனை வெல்லுதற் பொருட்டுத் தேவர்கள் தங்களை விடுத்தனரே! அன்னவர்களால் வெந்தழிந்தனை, தங்களைப் போல் யானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமென்னும் வெந்தழலால் எரிகின்றேன். தாங்கள் சென்ற இடத்திற்கு யானும் வருகின்றேன்; என்னுயிர்க்குயிரே!'' என்று பலவாறு புலம்பி வருந்தினள்.

## மோன நீங்குதல்

திசைமுகனாதி தேவர்கள் மன்மதன் எரிந்து நீறாயினதையும், சிவமூர்த்தி முன்போலவே மௌனத்துடன் வீற்றிருந்தலையும் கண்டு, உடல் வியர்த்து, உள்ளங் கலங்கி, விழிநீர் பெருக்கி, மெய்நடுங்கி, துன்பக்கடலில் அழுந்தி, அழுதார்கள். "நமது அல்லல் அகலும் பொருட்டு ஆலமுண்ட அண்ணலிடம் மன்மதனை ஏவினோம். அரனார் அவனைப் பொடிபடுத்தினர்; மோனநிலையினின்றும் நீங்கினாரில்லை. அந்தோ! இனி என் செய்வோம்?" என்று புலம்பினார்கள்.

"காமனை எரித்த கண்ணுதலின் மௌனநிலையை உபாயத்தினால் மாற்றுதல் முடியாது; அவர் நம்மைத் துன்பத்தினைத் துடைத்து இன்பத்தை நல்கிக் காத்தருள வேண்டுமாயின், நாம் அவரைத் துதிப்பதே கடன்" என்று எண்ணி அயன் முதலிய அமரர்கள், கயிலை மலையின் மேல் திகழும் கோபுரத்தின் புறத்தே சென்று துதிக்கலானார்கள்.

"மங்கை பாகா! சொற்பதங் கடந்த அற்புதா! மூவருமறியா முழுமுதலே! கடல் நஞ்சை அருந்தியும், கங்கையைச் சூடியும், நெற்றியில் கனல்விழியைப் படைத்தும், கொடிய அவுணர்களைக் கொன்றும், முன்னாளில் எளியேங்களைக் காத்தருளினீர் இத்தருணம் கைவிடுவீரேல் மைந்தர்களாகிய எமக்குத் தந்தையாகிய தேவரீரையன்றிப் புகலிடமாவார் யாவர்? அடியார்கள் குற்றமே செய்யினுங் குணமெனக் கொள்ளும் குன்ற வில்லியே! உமது பூங்கழலே சரணம் என்றடைந்தோம். நாங்கள் நாடோறும் சூரபன்மனாலே துன்புற்றுமாளலாமோ? எமது இடரைச் சிறிதேனும் நினைந்தருள் புரியீரா?

எந்தையே! அம்பிகையைப் பிரிந்து யோகநெறியைக் காட்டியது உமக்கு ஒரு கணப்பொழுதே ஆகும். எமக்கு எண்ணிலா யுகங்கள் சென்றன; இன்னும் தாங்கள் புறக்கணித்திருக்கில் யாம் எவ்வாறு உய்வோம்? திருமால் முதலிய அனைவரும் உம்மை நோக்கி அருந்தவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்து உமது அடிமலர்களை அர்ச்சிக்க, தேவரீரே இப்பதவிகளையும் ஏனைய நலன்களையும் தந்தருளினீர்.

தோற்றமின்றியே ஐந்தொழிலியற்றிய தொல்லோய்! நீர் கொண்ட, தவநிலை எம்பொருட்டேயன்றோ? அடியேங்கள் செய்த தீவினையால் தினந்தோறும் துன்பமாகிய வாளால் துணிக்கின்றீர்; இனி எங்களைக் காப்பாற்றுதல் அல்லது அழித்து விடுதல்; இந்த இரண்டில் எது உமக்குத் திருவுளமோ அதைப்புரியும். தேவ தேவ! உமாதேவி மணந்து எமது இடரைக் களைவீரென்று அறிவிலிகளாகிய அடியேங்கள் மதனனை அனுப்பினோம். அவனை எரித்து முன்போலவே மோன நிலையில் எழுந்தருளியுள்ளீர்; இங்கு யாம் இடர்ப்பட்டு அழிவது தக்கதோ? இனியேனும் சிறிது திருவுளமிரங்கிக் காத்தருளல் வேண்டும். நரசிங்கம் முதலிய விலங்குகளை உரித்து அவற்றின் தோல்களைத் தரித்தீர்; தக்கனது பெருமகத்தை வீரபத்திரரைக் கொண்டு தடிந்தீர்; அதுபோல் சூராதி அவுணர்களைத் தொலைத்து எமது துன்பத்தை துடைத்தல் வேண்டும்'' என்று முறையிட்டார்கள்.

பிரமாதி தேவர்கள் அழலிடைப்பட்ட மெழுகென உருகி, அழுது தொழுது காமுற்று அரற்றித் துதித்தலும், அவர் பாவந்தொலையும் சமயம் நெருங்கிவிட்டதால் திருவுளம் இரங்கி, நந்தியை நினைந்தனர். அதனை உணர்ந்த நந்திதேவர் இறைவன் முன் சென்று இறைஞ்சி நிற்க, சிவமூர்த்தி, "அம்புயனாதி அமரர்களை நம்முன் அழைத்து வருதி'' என்றனர். நந்தியங்கடவுள் கோபுரவாயிலையடைய பங்கயனாதியோர் பணிய நந்திதேவர், "வருந்தன்மின்; உம்மை அழைத்து வருமாறு கண்ணுதற்பெருமான் கட்டளையிட்டனர்; வாருங்கள்'' என்றனர்.

அவ்வார்த்தை அமுதஞ் சொரிவதுபோல் செவியில் நுழைய தேவர்கள் அளப்பறும் மகிழ்வெய்தி, சிவமூர்த்தியைத் துதித்து ஆடினார்கள். நந்திதேவர் அவர்களை அழைத்துச் சிவ சந்நிதியில் விடுத்தனர். தேவர்கள் மதிமுடிப்பரமனைப் பலகாலும் பணிந்து, "பூத நாத! பொருவிடைப்பாக! சிவசிவ! ஹரஹர! என்று துதித்து நின்றனர். புரமெரித்த புண்ணியன், " துன்பத்தையும், விண்ணப்பத்தையும் விளம்புமின்'' என்றனர்.

தேவர்கள், "அருட்பெருங்கடலே! அநேக யுகங்களாக சூரனது ஆணையால் அலக்கணுற்று வருந்துகிறோம்; தங்களை அன்றி எமது துன்பத்தை நீக்குவோர் யாவருளர்? சூராதி அவுணரை அழிக்கவல்ல ஒரு குமாரரைத் தந்தருளும் வண்ணம், இமயமால் வரையில் தவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியும் மரகதவல்லியை மணமுடித்தருளல் வேண்டும்" என்று கூறி எம்பெருமான் இணையடிமேல் வீழ்ந்து வேண்டினார்கள்.

மதிமுடிப் பரமன், "அன்புடையீர்! வருந்தாதீர்; உங்கள் பொருட்டு மலைமங்கையை மணந்து உமது வருத்தத்தை மாற்றுதும், நீவிர் நுமது இருக்கை செல்லுமின்" என்று அருள்புரிந்தனர். தேவர்கள் மகிழ்ந்து வணங்கி மேரு மலையைச் சேர்ந்தனர்.

அதுகண்ட இரதிதேவி எம்பெருமான் திருமுன்னர் வந்து வணங்கி, "முறையோ! முறையோ!! எப்பொருட்கும் இறைவா! பங்கயனாதி பண்ணவர் ஏவலினாலே எனது நாயகன் தேவரீர்மீது மலர்க்கணைகளை ஏவி அழிந்தனன். அவன்புரிந்த குற்றத்தைத் திருவுளம் கொள்ளாது அருள் புரிதல் வேண்டும்" என்று முறையிட்டனள்.

சிவபெருமான் கருணைகூர்ந்து, 'இரதியே! நீ புலம்பறக; மலையரையன் தந்த மரகதவல்லியை யாம் மணம்புரியும் போது நினது பதியை உயிர்ப்பித்தருளுவோம்; சிந்தா குலமற்றுச் செல்லுதி" என்றனர். இரதிதேவி இறைவனை இறைஞ்சி இமையவரை சென்று ஒருபுறத்தே மேகத்தின் வரவை நோக்கும் மயிலே போலிருந்தனள்.

சிவபெருமான் மலைவளர்காதலியை மணம்புரிவான் உன்னி, "சனகாதி நால்வரை நோக்கி, "மைந்தர்களே! சிவஞானமென்பது வாய்விட்டுச் சொல்லுந் தகையதன்று; அது இவ்வாறு மௌனத்தோடிருந்து நம்மை அறிவதேயாம்" என்று கூற, முனிவர்கள் தெளிவடைந்து தேசிகேசனர்ந் தேவதேவனைப் பன்முறை வணங்கி, "எந்தாய்! அடியேங்கள் மயக்கமற்றுத் தெளிவடைந்தோம்; ஆவியீடேறும் வகை பெற்றுய்ந்தோம்" என்று புகழ்ந்து போற்றினர்.

கறைமிடற்றண்ணல்," இனி நீவிர் இவ்வாறு சிவயோகத்திலிருந்து எமது சிவகதி சேருமின்" என்று விடை தந்து அனுப்பினர்.

வளரும்.............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம்

(தொடர்ச்சி)

யாருடைய வார்த்தைகளையும் கேட்பதும் இல்லை. யாரையும் பார்க்கப் போவதுமில்லை.

ஆனால், இன்று ஆத்மாவைப் பற்றி அநேகவிதமான அபிப்பிராய பேதங்கள் எழுந்து விட்டன.

ஆத்மாவை ஆவி என்றும்; அவை பேசுகின்றன, உட்காருகின்றன, செயலாற்றுகின்றன என்றும் சொல்லப்படும் கதைகள் உருவாகிவிட்டன.

இங்கே அது நமக்கு முக்கியமில்லை.

யாருக்கு மனச் சாந்தியில்லாது போகும்?

உடலுடன் இருக்கும் மனிதனுக்கா?

உயிரற்ற மனிதனுக்கா?

என்று ஆலோசித்துப் பார்க்கும் போதுதான் உடல் பெற்ற மனிதனுக்குத்தான் பிரச்சினைகள் வாயிலாக மனம் சாந்தியற்றுப் போகும் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

## மனிதனின் ஏக்கம்

இந்த உலகில் பிறவி எடுக்கும் ஒவ்வொரு மனிதனும் கவலையினால் கண்கலங்கி இருக்கும் போது-

துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் போது-

பிரச்சினைகளினால் பாதிக்கப்பட்டிருக்கும் போது-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனையில் வெதும்பியிருக்கும் போது-

கலக்கத்தினால் கவிந்திருக்கும் போது-

அவனுடைய மனம் சலனமடைகிறது. சாந்தியை இழக்கிறது. சஞ்சலத்தை அடைகிறது.

அந்த நேரத்தில் எங்கே நிம்மதி, எங்கே நிம்மதி என்று புலம்பியழுது சோக ராகம் பாடுபவனாக உள்ளான்.

## சாந்தியை விரும்பும் மனிதன்

இரவு என்று ஒன்று இருப்பதைத் தெரிந்ததாலேயே பகல் விரும்பப்படுகிறது.

துக்கம் இருப்பது அறியப்பட்டதாலேயே சுகத்தை மனம் தேடியலைகிறது.

அதே போல துயரில்லாத பரிபூர்ண சாந்தியை ஒரு காலக்கட்டத்தில் மனிதன் அனுபவித்ததன் காரணத்தினாலேயே-

சாந்தியற்ற நிலைமை எது என்று அவனுக்குப் புரிகின்றது.

தனக்குப் பரிபூரண நிம்மதியும், மன ஓய்வும் தேவைப்படும் ஒருவன்தான் சாந்தியை விரும்புகிறான்.

## ஆத்மாவும் மனமும்

இந்தக் காலக்கட்டத்தில் நீங்கள் ஒன்றை அறிந்து கொள்ள வேண்டியது அவசியத்திலும் அவசியம் ஆகும்.

ஆத்மா எனப்படுவதன் எதார்த்தமான சுபாவம் மனத்திற்கும் ஏற்படும் சாந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதார்த்தமில்லாத மாறபாடான சுபாவம் எனப்படுவது மனத்திற்கு சாந்தி ஏற்படாத நிலைமை.

உண்மையில் மனம் என்பதுதான் என்ன?

மனம் எனப்படுவது ஆத்மாவுடைய திடமான நம்பிக்கையின் மறுபெயராகும்.

இவ்வாறு நாம் சொல்லும்போது ஆத்மா வேறு மனம் வேறு என்று நினைக்கும்படியாக உள்ளது. இதனை உண்மை என்றே வைத்துப் பேசவோமானால்-

மனம் எனப்படுவது இந்த ஸ்தூல உடலின் ஒரு பாகம் என்று தான் கருதப்பட வேண்டும்.

அவ்வாறு கருதும் பட்சத்தில் இந்த மனத்திற்கும் மரணம் ஏற்படுகிறது என்றும் நாம் நம்பித்தான் தீர வேண்டும்.

எப்போது இந்த உடல் மரணமடைகின்றதோ, அப்போதே மனமும் மரணமடைந்து விடுகின்றது என்றும் பொருளாகி விடுகின்றது.

உண்மையைச் சொல்லப்போனால், இது சரியில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

## புரிந்து கொள்ளுங்கள்

சிலர் மனம் என்பதை இருதயம் என்று தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

கிறிஸ்தவத்தில் கூட, 'உன் இதயத்திலிருந்து எழக்கூடிய எண்ணங்கள்' என்று குறிப்பிடப்படுகின்றது.

இதயம் என்பது மனமில்லை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது உடலில் உள்ள உறுப்புகளான கண், காது, மூக்கு, குடல், வயிறு ஆகியவற்றைப் போன்ற ஓர் உறுப்புதான்.

இந்த இருதயத்துக்கும், மனத்துக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

இதயம் மனித உறுப்பு-

மனம் மனித உறுப்பன்று.

அப்படியென்றால் மனம் எனப்படுவது என்ன என்று கேள்விகள் எழலாம்.

மனம் எனப்படுவது ஆத்மாவின் உறுப்பே தவிர வேறு எதுவுமில்லை.

## ஆத்மாவின் உறுப்புகள்

ஆத்மாவின் உறுப்புகள் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவை:-

1. மனம்
2. புத்தி
3. ஸம்ஸ்காரம்

எனப்படுபவையாகும். இந்த மூன்றுமே ஆத்மாவின் சக்திகள் ஆகும்.

## சக்திகளைப் பற்றி விளக்கங்கள்

இங்கே ஆத்மா என்று சொல்லப்படுவது ஜோதி ஸ்வரூபமான சைதனய சக்தி என்று சொல்லப்படுகின்றது.

இந்த சைதன்ய சக்தியானது, பிறவிக் குணாதிசயங்களின் ஒரு கலப்பாகும்.

மனம் எனப்படுவது ஆத்மாவுடைய சங்கல்ப சக்தியாகும். இங்கே சங்கல்பங்கள் என்று சொல்லப்படுபவை, எண்ணங்கள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தி என்று சொல்லப்படக் கூடியது. ஆத்மாவுடைய நிர்ணயிக்கக் கூடிய சக்தி என்று கூறப்படுகின்றது. இதனை விவேக சக்தி என்றும் கூடச் சொல்லலாம்.

இந்த ஆத்மா, எனப்படுவதுதான் மனம் என்னும் சக்தியின் மூலமாக, எண்ணங்களைப் பிறப்பித்துக் கொண்டே உள்ளது.

மனிதனின் மனத்தில், கடலிலிருந்து எழக்கூடிய அலைகளைப் போல், தொடர்ந்து ஒன்று மாற்றி ஒன்றாக, ஓயாமல், ஒழியாமல் எண்ண அலைகள் உற்பத்தி ஆகிக்கொண்டே உள்ளன.

அந்த அலைகள் மனம் என்னும் கடலிலிருந்து எழுந்து வெளியே முயலுவதும்-

திரும்பவும் உள்ளுக்குள்ளே சென்று அமிழ்ந்துவிட முயலுவதும்-

இதனை அப்படிச் செய்யவிடாமல் புதிய அலைகள் உற்பத்தியாகி கரையை நோக்கித் துரத்தி அடிப்பதுமான ஒருவகையான இந்திர ஜாலங்கள் நிகழ்ந்து கொண்டே உள்ளன.

## எண்ணங்களின் வகைகள்

எண்ணங்கள் இரண்டு வகைப்பட்டதாகப் பிரிகின்றன.

1. நல்ல எண்ணங்கள்-
2. கெட்ட எண்ணங்கள்-

இதில் நல்லவை சுத்தமானவை என்றும், கெட்டவை அசுத்தமானவை என்றும் கருதப்படுகின்றன. இந்த எண்ணங்களை நிர்ணயிக்கக் கூடிய ஆற்றல் பெற்றதாகப் புத்தியே அமைகிறது. ஒரு காரியம் செய்யப்பட வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எழும் போது-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காரியத்தை அப்போது செய்யலாமா, வேண்டாமா? என்பதைப் பற்றியும்-

அக்காரியத்தை எப்போது செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் நிர்ணயிப்பது இந்தப் புத்திதான்.

எனவே மனத்தை ஆத்மாவின் எண்ண சக்தி என்று தான் கூற வேண்டும்.

மனத்தின் சூழ்நிலைகளுக்கு ஏற்ற வகையில் எண்ணங்கள் உருவாகின்றன.

இப்போது இதயம் என்பதன் விஷயத்துக்கு வருவோம்.

## இதய விவகாரம்

இதற்கு முன்னர் இதயம் எனப்படுவது உடலின் ஓர் உறுப்பு என்று கூறப்பட்டது. இந்த இதய விஷயத்தில், அடுத்தகட்டமாக இன்னும் சற்று விரிவாக ஆராய்வோம்.

பொதுவாக மனதைப் பற்றி குறிப்பிடும் போது அது எண்ணக்கூடிய சக்தி என்று விவரிக்கப்பட்டது.

இந்த இதயத்தை ஆராய்ந்து பார்க்கும் போது எந்த எண்ணங்களை மனம் எண்ணுகிறதோ அந்த எண்ணங்களில் உற்பத்தி ஸ்தானம் என்று கூடச் சொல்லலாம்.

மனமானது ஒரு விஷயத்தில் ஆழ்ந்திருக்கிறது என்றாலோ — எந்த விஷயத்தையும் பற்றுக் கொள்ளாமல் சதா சஞ்சரித்துக் கொண்டிருந்தாலோ-

அதன் தன்மைக்கு ஏற்றாற்போல இதயம் கொடூரத் தன்மையையும்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரக்கமான, மெலிந்த, பரிவான குணத்தையும் ஆதாரமாக்கிக் கொள்கின்றன.

## விளக்கமாகப் புரிந்து கொள்ளுங்கள்

மனித மனத்திலிருந்து எழக்கூடிய எண்ணங்கள் என்பவை, நல்ல எண்ணங்களாகவும்-

சுத்தமான, ஆரோக்கியமான எண்ணங்களாகவும் இருக்கும் பட்சத்தில்-

இதயமும் பிறருக்காக இளகித் தவித்துக் கொண்டும், பச்சாதாபப்பட்டுக் கொண்டும், பரிதாபப்பட்டுக் கொண்டும், இரக்கப்பட்டுக் கொண்டும் இருக்கும்.

எந்த மனத்தில் தீய எண்ணங்களும், வஞ்சக எண்ணங்களும், ஆரோக்கியமற்ற தூய்மையில்லாத எண்ணங்களும் எழுகின்றனவோ-

அந்த இதயம் கொடூரத்தன்மை வாய்ந்ததாகவும்-

இரக்கமற்றதாகவும் போய் இருதயம் போன்று பயங்கரமுள்ளதாக வும், திடுக்கிட வைப்பதாகவும் அமைந்து விடுகின்றன.

இதை எவராலும் அவ்வளவு சுலபத்திலே மாற்றி விட முடியாது.

## இதயத்தைக் காப்பாற்றுங்கள்

இதயத்தை ஆளக் கூடிய சர்வ வல்லமை பெற்ற சக்தி ஒன்று உண்டு என்றால், அது மனம் தான்.

எனவே இதயம் ஓர் அற்புதமான இடத்தைப் பெறுகின்றது. இந்த அர்த்தத்தைக் கைக்கொண்டுதான் கிறிஸ்தவ நூல் முழுவதும் ஆளப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு, நம்பிக்கை, விசுவாசம் ஆகியவைதான் கிறிஸ்தவத்தின் திறவுகோல் - இயேசு கிறிஸ்துவின் திறந்திருக்கும் இதயமும்-

ஸ்ரீ ஆஞ்சநேயரின் திறந்திருக்கும் இதயமும்-

இதனையே நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன.

இவ்வகைப்பட்ட இதயமும், உறுப்பு என்ற ரீதியில் வியாதியிலிருந்து பாதுகாக்கப்பட -

மனத்தின் எழக்கூடிய எண்ணங்களைக் கடினமில்லாமல், இலேசான முறையில் வைத்திருக்க வேண்டியது அவசியம்-

மிக ஆழமான சிந்தனைகளோ –

எண்ணங்களோ –

இதயத்தை ஆரோக்கியமிழக்க வைக்கும்.

## பாவப்பட்ட மனம் என்று வர்ணிக்கலாமா?

பாவப்பட்ட மனம் என்று வர்ணிக்கும் போதே அது பாவியான மனம் என்றே ஆகிவிடுகிறது.

உண்மையில் மனம் எனப்படுவது நம்மைப் படுகுழியில் தள்ளிவிட வந்த சாத்தானா?

இல்லை!

மனம் எனப்படுவது நூற்றுக்கு நூறு எப்படிக் கெட்ட எண்ணங்களைப் பிறப்பிப்பதில்லையோ –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அளவுக்கு நூற்றுக்கு நூறு நல்ல எண்ணங்களையும் பிறப்பிப்பதில்லை.

நல்ல எண்ணங்களும், கெட்ட எண்ணங்களும் மனிதனைப் பொறுத்தவரையில் சமமாகவோ, சற்று குறைவு, அதிகமாகவோ இருந்து ஆண்டு கொண்டே உள்ளன.

நாம் எக்காரியத்தைச் செய்தாலும் அது நல்லதாக இருந்தாலும் சரி...

கெட்டதாக இருந்தாலும் சரி -

அந்த எண்ணத்தைச் செய்யத் தூண்டுவது மனம் தான்!

எனவே, மனிதனைப் பாவி என்று பொத்தாம் பொதுவாக வையவும் முடியாது; கூடாது!

உலக மகா உத்தமன் என்று வைரக் கீரிடம் சூட்டி, அரியாசனத்தில் ஏற்றி வைக்கவும் முடியாது.

எனவே மனத்தைப் பாவப்பட்ட மனம் என்று வர்ணிப்பது தவறானது.

மனிதனை பாவி என்று முத்திரை குத்துவதும் தவறானதே!

மனிதன் மூன்றுவித மனோ நிலைகளைக் கொண்டவனாக இருக்கிறான் அதை வைத்துத்தான் அவன் பிரிக்கப்பட்டான்

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வராதே என்றாலும் வந்தவள்!

சாதாரணக் குடும்பம் ஒன்றில் ஒன்றில் ஓர் உத்தமி தன் பிறந்த வீட்டுப் பழக்கம் இரண்டைப் புகுந்த வீட்டிலும் கடைப்பிடித்து வந்தாள்! அந்த வீட்டில் வெகு விரைவில் செல்வம் குவியத் தொடங்கியது. வெள்ளிக்கிழமை தோறும் விலையுயர்ந்த ஆடையும் அணிகளும் அணிந்த மிகுந்த தெய்வீக வனப்புள்ள ஒரு மாது அந்த வீட்டுக்குள் வருவாள்.

இதன் காரணம் விளங்காத மாமியார் ஒரு சாமியாரைக் கேட்டபோது அவர் "உன் புது மருமகள் நாள்தோறும் விடியுமுன் வாசலில் சாண நீர் தெளித்து, முற்றத்தை மெழுகிக் கோலமிடுவதாலும், பொழுது சாய்வதற்கு முன் எண்ணெய் விளக்கேற்றி வாசலில் வைப்பதாலும்தான் செல்வம் கொழிக்கிறது. நீ வெள்ளிக்கிழமையன்று காணும் ரூபவதி ஸ்ரீ மகாலக்ஷ்மியே" என்று விளக்கினார்

பொறாமை மிகுந்த மாமியார், உடனே மருமகளிடம் "காலையில் சாணநீர் தெளித்தல், மாலையில் விளக்கேற்றல் இரண்டும் கூடாதுதென்று" உத்தரவிட்டாள். அடக்கமுள்ள மருமகள் மாமியாருக்குத் தெரியாமல் மாலையில் ஒரு சிறிய விளக்கையேற்றி, ஒரு குடத்துக்குள்ளே வைப்பாள். காலையில் ஒரு விரல் நுனியில் சாணியை எடுத்து வாசலில் போடுவாள்.

இதற்குப் பிறகும், வெள்ளிக்கிழமைதோறும் அந்த வீட்டுக்கு மகாலக்ஷ்மி வருவதைக் கண்ட மாமியார், "இன்னமும் ஏன் என் வீட்டுக்கு நீ வருகிறாய்?" என்று கடிந்தாள்!

அப்போது மகாலக்ஷ்மி "குடத்துக்குள் இட்ட விளக்குக்காகவும் குன்றிமணி சாணிக்காகவும் இன்னமும் வருகிறேன்!" என்று சொல்லி மகாலக்ஷ்மி உள்ளே நுழைந்தாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்க்க சுமங்கலி

பெண்கள் பெரியோர்களை நமஸ்கரிக்கும் போது,"நீ தீர்க்க சுமங்கலியாக இருப்பாய்!" என்று ஆசீர்வதிக்கிறார்கள். இதில் உன் கணவன் வெகு காலம் ஜீவித்திருக்க வேண்டும் என்ற கருத்தும் உள்ளடக்கி இருக்கிறது. ஆகவே, பெண்ணினுடைய வாழ்க்கை முழுவதும் கணவனுடைய க்ஷேமத்தைப் பொறுத்தே அமைகிறது. ஒரு பெண் செய்யக்கூடிய நல்லது கெட்டதனுடைய பலனெல்லாம் கூட பூரணமாகப் பெண்ணுக்கே உரித்தாகிவிடுகிறதில்லை. அது அவர்களது கணவனைத்தான் சேருகிறது. எனவே, பெண்கள் நல்லதை நிறையச் செய்தால், நல்ல ஆசீர்வாதத்தை நிறையப் பெற்றால், கணவன், குடும்பம் எல்லோரும் க்ஷேமமாக இருக்க முடியும்.

சில பெண்கள் பெரியோர்களை நமஸ்கரித்துக் கொண்டு கீழ்க்கண்டவாறு பிரார்த்தனை செய்து கொள்கிறார்கள்; "நான் மஞ்சள் குங்குமத்துடன் சாக வேண்டும்" இதனால் பெண்கள் மஞ்சள் குங்குமம் தான் இட்டுக்கொள்ள வேண்டும் என்று தெரிகிறது. மஞ்சள் குங்குமம் என்பது அம்பாளின் நினைவுச் சின்னம். ஆதலால் தற்காலத்தில் உடைக்கு ஏற்றவாறு நெற்றிக்கு இட்டுக்கொள்வது – அல்லது கலர் சாந்தை இட்டுக் கொள்வது அல்லது நெற்றிக்கே இட்டுக் கொள்ளாமல் இருப்பது போன்றவை வருந்தத் தக்கதாய் இருக்கின்றது. மேலும் நெற்றிக்கு இட்டுக் கொள்வதென்பது – சினிமாவில் எப்படி எல்லாம் இட்டுக் கொள்கின்றார்களோ, அப்படியெல்லாம் விபூதி – குங்குமம் ஆகியவற்றை மேலும் கீழுமாக இட்டுக் கொள்வது என்பது சரியல்ல. சினிமாவில் வரும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பொழுதுபோக்காக எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர, வாழ்க்கைக்கு ஏற்றதாக அமைத்துக்கொள்ளக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

சிவ. முத்துலிங்கம்

✦ ஆன்மீக மேம்பாட்டிலே ஒவ்வொரு இனத்தின் வளர்ச்சியும் தங்கியுள்ளது.

✦ மகான்களும் ஞானிகளும் பல இலட்சக்கணக்கான உள்ளங்களில் ஆன்மீகத்தீயை கொழுந்து விட்டெரியச் செய்கின்றார்கள்.

✦ உறுதியான கொள்கையில் திடமான நம்பிக்கையுள்ள மன உறுதி நிறைந்த மனிதர்கள் உருவாக வேண்டும்.

✦ எங்கள் யாவருடைய வாழ்க்கையிலும் விநோதமான செயல் என்னவென்றால் நாங்கள் யாவரும் ஆன்ம விடுதலையை நோக்கிப் பயணம் செய்துகொண்டிருப்பதே. இதைப் பலர் அறிவதில்லை.

✦ பக்தியும் அருளும் கடையில் வேண்டும் சரக்கல்ல. எல்லாம் வல்ல இறைவனின் தனிப்பெருங் கருணையாலே அவற்றைப் பெறவேண்டும்.

✦✦✦✦✦✦✦✦

1 ம் திகதி அமாவாசை விரதம்
5 ம் திகதி சதுர்த்தி விரதம், விநாயகர் ஷஷ்டி விரதம்
6 ம் திகதி அட்டமி நவமி
8 ம் திகதி திருவெம்பா விரதம்
11 ம் திகதி ஏகாதசி
13 ம் திகதி பிரதோஷ விரதம், கார்த்திகை விரதம்
15 ம் திகதி பூரணை விரதம்
17 ம் திகதி ஆருத்திரா நடேசர் அபிஷேகம்
19 ம் திகதி சங்கடஹர சதுர்த்தி
27 ம் திகதி ஏகாதசி விரதம்
28 ம் திகதி பிரதோஷ விரதம், அமாவாசை விரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோரும் நலமே வாழ வேண்டும்

இறைவனை நோக்கி தவமிருந்தான் அந்த ஏழை. இறைவனும் அவன் முன் தோன்றினார். பிரமித்துப் போனான் ஏழை. வீடு வேண்டும், வைடூரிய வைர ஆபரணங்கள் வேண்டும், நிறையப்பணம் வேண்டும் என்று கேட்டான்.

இப்போது என்ன வேண்டும் என்று கடவுள் கேட்டார். "பசிக்கிறது ஒரு குவளை சோறு போதும்" என்றான். "இந்தா பசி தீர்த்துக்கொள், சந்தோஷமாய் இருப்பாய்" என்று அறிவுறுத்தினார்.

வயிறு நிரம்பியதில் ஏழைசந்தோஷமடைந்தான். உழைத்தான். கடவுளிடம் விரும்பிக் கேட்டதையெல்லாம் உழைத்துச் சேர்த்துக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை முழுவவதும் வளமுடன் வாழ

அண்ணா

# ஜீவாகாரம்

போசாக்குக் குறைவு

வளரும் குழந்தைகளுக்கும் கர்ப்பிணித் தாய்மாருக்கும் சிறந்த போசாக்கு மிக்க உணவு



அண்ணா தொழிலகம் - இணுவில் தொலைபேசி : 021 - 2223565



பசுவதையை நிறுத்துவோம்
பசுவைக் காப்போம்.



ஒரு பசு 1000 பேருக்கு பால் கொடுக்கும்
ஒரு பசுவைக் கொன்றால் 25 பேர் சாப்பிடுவர்

இச்சஞ்சிகை ஏழாலை ஆத்மஜோதி தியான மணிமண்டப சபை திரு.நா.முருகையா அவர்களால்
இல:351 மணிக்கூண்டு வீதி யாழ்ப்பாணம்; ஐய்ராம் பிறின்ரேஸ் ஸ்தாபனத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org